<u>வாக்குமூலம்</u>
<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>
<u>வழக்கு எண் : CC.No. 32/2022</u>
<u>வழக்கு சாட்சி PW–7</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தினேஷ் பாபு | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | தங்கபாண்டியன் | தொழில் | : | உதவி ஆய்வாளர் |
| கிராமம் | : | கோயம்புத்தூர் | வயது | : | 36 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday of 07.05.2026.

**எதிரிகள் ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

<u>முதல் விசாரணை :</u>

நான் தற்போது கோவை மாநகர் சிங்காநல்லூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் சேர்ந்தமரம் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது, கடந்த 23.05.2020 ம் தேதி, 13.30 மணிக்கு காவல் நிலைய குற்றஎண்.256/2020 வழக்கினை என்னுடைய விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அதே தேதியில் 17.15 மணியளவில் வழக்கின் சம்பவயிடம் சென்று சாட்சிகள் சரவணன் மற்றும் மனோஜா ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு, ஒரு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தேன். வரைபடம் **அ.சா.ஆ.5** ஆகும்.

பின்னர், சாட்சிகள் மாரியப்பன், பொன்னுதாய், சரணவனன், மனோஜா ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் சாட்சிகள் குமார், கருப்பசாமி மற்றும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த

முதல் நிலைய காவலர் மாடசாமி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்னர் வழக்கில் காயம்பட்ட மாரியப்பன் மற்றும் பொன்னுதாய் ஆகியோர்களுக்கு சிகிச்சை அளித்த மருத்துவர்கள் தேவிபிரபா, கல்யாணி மற்றும் பழனிகுமார் ஆகியோர்களை விசாரித்து காயச்சான்றிதழ் பெற்றேன். காயம்பட்டவர்களுக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்பதனால் வழக்கின் சட்டபிரிவை 326 இதச வாக மாற்றி சட்ட மாறுதல் அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த சட்ட மாறுதல் அறிக்கை அசாஆ.6 ஆகும்.

பின்னர், சாட்சிகளின் வாக்குமூலத்தின் அடிப்படையிலும், விசாரணையின் அடிப்படையிலும் எதிரி மீது சட்டப்பிரிவுகள் 294(பி), 323, 324, 326, 506 (2) IPC படி & 4 of TNPHW Act ன் படி 06.10.2020 அன்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>

இல்லை.

சாட்சி கோயம்புத்தூர் ஒருங்கிணைந்த நீதிமன்ற காணொளி அறையில் இருந்து காணொளி மூலம் ஆஜரானார். அவரது வாக்குமூலம் Thiru. Hentry Mohan , Technical S.I. முதன்மை மாவட்ட நீதிமன்றம், கோயம்புத்தூர் என்பவர் முன்னிலையில் ஒருங்கிணைக்கப்பட்டு, இந்த திறந்த நீதிமன்றத்தில் பெஞ்ச் கிளார்க் அவர்களால் பிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.05.26 11:42:40 +0530